12th November 1965]

are engaged in the manufacture of fire bricks. The other lessee, viz., M/s. Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, have not yet commenced mining operations in the areas leased out of them.

(c) A sum of about Rs. 2,800 (rupees two thousand and eight hundred only) per annum is collected from the above three lessees towards dead rent, surface rent and cesses.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : குறைந்த பட்சம் எத்தனை டன் வெள்ளைக் களி மண் கிடைத்தால் அந்த இடத்தில் பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிர்வாகம் சம்பந்தப் பட்டது அல்ல. தொழில் நுட்பம் சம்பந்தப்பட்டது. தனியாகக் கேள்வி போட்டால், அந்த நுட்பம் தெரிந்தவர்களைக் கேட்டுப் பதில் சொல்ல முடியும்.

சர்க்கரை ஆலை

*** 510 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா.—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை துவங்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனை யிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது, பொதுத்துறையிலா, கூட்டுறவுத் துறையிலா, தனியார் துறையிலா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்கும்போது, அதை வட ஆற்காடு மாவட்டத் திலேயே மிகவும் பின் தங்கிய பகுதியாக இருக்கும் தென் வேலூர் பகுதியில், செய்யாறு ரெவினியு டிவிஷனில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில விஷயங்கள் தான் பின் தங்கிய பகுதியில் செய்ய முடியும். சில விஷயங்கள் எங்கே இயற்கை வசதி இருக்கிறதோ அங்கே தான் செய்ய முடியும். இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கேற்ற அளவிற்கு எங்கே கரும்பு ஏராளமாகக் கிடைக்குமோ அங்கே தான் தொழிற்சாலை வைக்க முடியும். கரும்பு எவ்வளவு கிடைக்கிறது என்று கமிட்டி போட்டு ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன்படி பார்த்தால், இது வேலூர்-வடக்கு, வேலூர்-தெற்கு ; வாலாஜா ; ஆரணி தாலுக்காப் பகுதிகளில் வைக்கப்படலாம் என்பது ஒரு கருத்து, மற்றொன்று குடியாத்தம், ஆம்பூர், திருப்பத்தூர் வாணியம்பாடி பகுதியிலே வைக்க முடியும் என்றும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

[12th November 1965

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இன்னும் எத்தனை சர்க்கரை ஆலைகள் துவக்க எண்ணமிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய எண்ணம் ஆறு சர்க்கரை ஆலைகள் வைக்க வேண்டும் என்பது. மத்திய சர்க்காருடைய எண்ணம் இன்னும் புரியவில்லை.

திரு. எஸ். முருகையன் : வட வேலூர் பகுதியில் ஆம்பூருக்கு அருகில் ஏற்கெனவே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்கும் திருப்பத்தூருக்கும் கிட்டத்தட்ட 15 மைல் தூரம் தான். தென் வேலூர் மாவட்டத்தின் ஏராளமான கரும்பு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, போளூர் தாலுக்காவிலோ, ஆரணி தாலுக்காவிலோ இந்தச் சர்க்கரை ஆலையை வைக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதெல்லாம் நாம் எங்கு வேண்டுமானாலும் வைக்க முடியாது. விவசாய டைரக்டர், சர்க்கரை ஆலை சம்பந்தப்பட்ட ஸ்பெஷல் ஆபீசர் போன்ற அதிகாரிகளைப் போட்டு எந்த இடத்தில் வைக்கமுடியும் என்று பரிசிலனை செய்ததில், திருவண்ணாமலை பார்டரில் தான் வரும் என்று தோன்றுகிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலை லைசன்சுக்காக விண்ணப்பித்திருப்பதாக, தருமபுரி மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். தேசிய நெருக்கடி காரணமாக ஏதாவது கால தாமதம் ஏற்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதிலே நெருக்கடி ஏற்படாது என்று நினைக்கிறேன்.

Cement Factory at Alankulam

* 511 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the stage to which the preliminary work connected with the setting up of a cement plant at Alankulam near Sivakasi, has progressed?

THE HON. SRI R. VENKATARAMAN : The land acquisition proceedings in respect of the lands required for the Cement Plant are in an advanced stage. Tenders for the supply of machinery for the Plant are under scrutiny of the Government.

கனி வளம்

* 512 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடசேல மாவட்டத்தில் கிடைக்கும் கனிப்பொருள்களைப் பயன்படுத்தும் பொருட்டு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?